# பெ.சண்முகத்தின் உண்மை முகம் - 3

“இந்த ஆட்சி மாற்றம், தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத ஒரு ஆட்சி வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்களித்துள்ளார்கள்” என்கிறார் மார்க்சிஸ்ட் செயலாளர் பெ.சண்முகம். அந்த நோக்கத்தோடு மக்கள் வாக்களித்து இருந்தால் விஜய் கட்சி 160 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றிருக்க வேண்டும். பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான 117 இடத்தையே பெறாதவர் தான் விஜய். 16 தொகுதிகளில் மிகக் குறைவான வாக்குகளில் வெற்றி பெற்றுள்ளது அவர் கட்சி. எட்டு மாவட்டங்களில் எந்தத் தொகுதியையும் கைப்பற்றவில்லை அவர் கட்சி.

1.55 கோடி வாக்குகளை தி.மு.க.கூட்டணியும், 1.34 கோடி வாக்குகளை அ.தி.மு.க. கூட்டணியும் பெற்றுள்ளன. தி.மு.க. கூட்டணியை விட 17 லட்சம் வாக்குகளை தான் கூடுதலாகப் பெற்றுள்ளார் விஜய். எனவே இதில் சண்முகம் மகிழ்ச்சி அடைய எதுவும் இல்லை.

அதே சண்முகம் தான், ‘ஆட்சி அமைக்க எந்தவொரு கட்சிக்கோ அணிக்கோ தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை’ என்றும் அதே கட்டுரையில் சொல்கிறார். தனிப்பெரும்பான்மை கிடைக்காத விஜய், தி.மு.க. கூட்டணியில் வென்ற கட்சிகளுக்கு அமைச்சர் பதவி கொடுத்தும், அ.தி.மு.க.வினருக்கு அமைச்சர் பதவி தரப்போவதாக நடித்தும் தனக்கு பெரும்பான்மை இருப்பதைப் போல காட்டி முதலமைச்சர் நாற்காலியில் இருக்கிறார்.

**ஆதரவு தந்த கட்சிகளை நம்பாமல் அ.தி.மு.க.வின் நான்கு உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்துள்ளார் விஜய். இன்னும் அதே பேரங்களை நடத்தி வருகிறார் விஜய். அவர்கள் கணக்குப் படி 15 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வர வைக்க வேண்டுமாம். அதில் விஜய் கட்சியே வெற்றி பெறுமாம். வெற்றி பெற்றதும் இந்த நான்கு கட்சிகளுக்கும் அல்வா தரப்படுமாம். இத்தகைய கேவலமான குதிரை பேர ஆட்சியை ஆதரிப்பது அவமானமாக இல்லையா?**


தி.மு.க. ஆட்சி மீது குற்றச்சாட்டுகளை இந்தக் கட்டுரையில் அடுக்குகிறார் சண்முகம். இது எதுவும் மே 4 ம் தேதிக்கு முன்பு வரை தெரியவில்லையா? இரண்டு சீட் ஜெயிப்பதற்கு வாயை மூடிக் கொண்டு இருந்தாரா? தி.மு.க. ஆட்சியை ஆதரித்து அவர் பேசிய பேச்சுகளே அவருக்கான பதில்கள். ‘ தி.மு.க.வின் தொடர் வெற்றியை உறுதிப்படுத்தும் 20 காரணிகள்’ என்று ‘தீக்கதிரில்’ ஒரு பக்கத்துக்கு ( 19.4.2026) எழுதி இருக்கிறார்கள். அதை எடுத்து அவரே படிக்கட்டும்.

“கடந்த 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு திறமையான நிர்வாகியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சியை உறுதி செய்துள்ளார். குறிப்பாக, பேரிடர் காலங்களில்

**ப.திருமாவேலன்**

நேரடியாகக் களத்தில் இறங்கிப் பணியாற்றிய விதம் மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு ‘பாதுகாவலர்’ என்ற பெயரைத் தந்துள்ளது. அரசு இயந்திரத்தைச் சுணக்கமின்றி இயக்கியதுடன், கட்சித் தலைவராகவும் கூட்டணி கட்சிகளை அரவணைத்துச் செல்வதில் அவர் காட்டிய முதிர்ச்சி, இந்தத் தேர்தலில் அவருக்கு மிகப்பெரிய பலமாக உருவெடுத்துள்ளது” என்று தான் தொடங்கியது இந்தக் கட்டுரை.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாழ்வாதார மாற்றம், விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்கள், சிதையாத மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி பலம், தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், மாநில சுயாட்சியும் ஒன்றிய அரசின் நிலைப்பாடும், நீட் தேர்வுக்கு எதிரான போராட்டங்கள், மக்களைத் தேடி மருத்துவம் என்பது ஒரு முன்னோடித் திட்டம், சமூகநீதி, சிறுபான்மையினரின்




முழுமையான ஆதரவு, ஆன்மீகமும் கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்களும், நவீன உட்கட்டமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி என்று தனித்தனி தலைப்புகள் போட்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விவரித்ததும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ நாளிதழ் தான். ஒரே மாதத்தில் சண்முகம் மனம் போன போக்கில் எழுதுகிறார்.

**தி.மு.க. ஆட்சி நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்ததாம். இதனால் மக்களுக்கு அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டதாம். மக்கள் கோபப்பட்டார்களாம். கேரளாவில் மார்க்சிஸ்ட் அரசாங்கம் கடைப்பிடித்ததும் நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கை தான். அதனால் கோபம் அடைந்த இளைஞர்கள் தான் மார்க்சிஸ்ட் அரசாங்கத்தை கேரளாவில் தூக்கி வீசினார்களா?**

கேரளாவில் அதானி குழுமத்தின் முதலீடுகளை மார்க்சிஸ்ட் அரசு அனுமதித்தது. விழிஞ்சம் துறைமுகம் அதானி கையில். கலமச்சேரி தளவாட பூங்கா அதானி குழுமத்தால் தொடங்கப்பட்டது. பிரதமர் மோடியும் முதலமைச்சர் பினராயி விஜயனும் அதானியும் ஒன்றாக நின்று பேசிக் கொள்ளும் படமே வெளியானது. நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மூலமாக மேம்படுத்தலாம் என்ற கேரள மார்க்சிஸ்ட் அரசின் நிலைப்பாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியே ( மார்ச் 7,2005) ஆதரித்துள்ளது. ‘நவ கேரளத்துக்கான புதிய பாதைகள்’ என்பது பினராயி விஜயன் தயாரித்த ஆவணத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டு விட்டது.

“In a slight shift from the Communist Party of India (Marxist) [CPI(M)]'s long held position on public sector units, the New Pathways for a Nava Keralam document presented by Chief Minister Pinarayi Vijayan, polit bureau member of the party, at the 24th State conference in Kollam, advocates restructuring of struggling PSUs under a public private partnership (PPP) model” (மார்ச் 7,2025, தி இந்து)

சி.பி.எம். கட்சியின் 24 ஆவது அகில இந்திய மாநாட்டை ஒட்டி பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. கேரள மாநில தொழில்துறை அமைச்சர் பி.ராஜீவ், ‘வர்த்தக முதலீடுகளும் தொழிலாளர் உரிமைகளும்’ என்ற தலைப்பில் சென்னையில் 13.3.2025 அன்று சென்னையில் உரையாற்றினார். அவர் பேசியது சோசலிசமா? நவதாராளமயமா? என்பதை சண்முகம் பார்க்க வேண்டும். தனது உரையில் பி.ராஜீவ் ஒரு மேற்கோள் காட்டுகிறார்.

“என்னுடைய மூச்சு கம்யூனிசத்தைக் கட்டமைப்பது தான். ஆனால் என்னுடைய இந்த அரசாங்கம் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டமைப்பதற்காகப் பணியாற்றவில்லை. மத்தியில் ஆளும் காங்கிரசின் கொள்கைகளில் முற்போக்கான அம்சங்களை நிறைவேற்றுவதற்காகவே நாங்கள் முயற்சி செய்கிறோம். கட்சியின் திட்டத்தை அமல்படுத்துவது இயலாது” என்று சொன்னவர் யார் தெரியுமா? கேரள முதலமைச்சர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத். ‘பெருமுதலாளிகளுக்கு எதிராக நாங்கள் முழக்கமிட்ட காலத்தில், கேரளாவில் தொழில் தொடங்குவதற்கு பிர்லாவைத் தான் அழைத்து வந்தார் ஈ.எம்.எஸ்.’ என்று தனது உரையில் குறிப்பிடுகிறார் மார்க்சிஸ்ட் அமைச்சர் பி.ராஜீவ். இந்தக் கட்டுரைகளையும் தொகுத்து ‘பாரதி புத்தகாலயம்’ தான் வெளியிட்டுள்ளது.

‘காவி மயமாகும் சிவப்பு’ என்று ‘தினமணி’ மகிழ்ந்து அப்போதே தலையங்கம் தீட்டியதையும் மறக்க முடியாது. எனவே நவ தாராளமயம் போன்ற வார்த்தைகளை வைத்துக் கொண்டு கொம்பு சுற்றுவதை சண்முகம் போன்றவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**தங்களது சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாடுகளுக்கு தத்துவார்த்த முலாம் பூசுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். செயலும் செயல் தந்திரமும் அற்ற நிலைப்பாடுகளுக்காக ரத்தம் கக்கும் வகையில் பேசுவதையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.**

●●

### திரிஷாவுடன் முதல்வர் விஜய் பிறந்தநாள் கொண்டாட்டம்:

## அமோனியா விபத்து 10 பேர் பலி! அதே நாளில்தான் இதுவும் நடந்து இருக்கு!

### தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!

சென்னை, ஜூன் 25-

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு விபத்தில் 10 தொழிலாளர்கள் உயிரிழந்ததும், 60க்கும் மேற்பட்டோர் உடல்நலக் குறைவால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதும் தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த துயர சம்பவம் நடைபெற்ற அதே நாளில், தமிழக முதல்வரும் தமிழக வெற்றிக் கழக (த.வெ.க.) தலைவருமான விஜய் தனது 52வது பிறந்தநாளைக் கொண்டாடியதாக சமூக வலைதளங்களில் விவாதம் எழுந்துள்ளது. குறிப்பாக நடிகை திரிஷா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விஜய்யுடன் கேக் வெட்டிய புகைப்படத்தை பகிர்ந்ததைத் தொடர்ந்து இந்த விவகாரம் மேலும் பேசுபொருளாகியுள்ளது.

விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து திரிஷா வெளியிட்ட பதிவில், “எல்லாவற்றையும் அர்த்தமுள்ளதாய் ஆக்கிய நபருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டிருந்தார். மேலும், நள்ளிரவு 12 மணிக்கே வாழ்த்து தெரிவித்ததை சுட்டிக்காட்டும் வகையில் “00:00” என்றும் பதிவிட்டிருந்தார்.

இதற்கிடையில், திருவள்ளூர் விபத்து காரணமாக தலைமைச் செயலகத்தில் திட்டமிடப்பட்டிருந்த பிறந்தநாள் கேக் வெட்டும் நிகழ்வை முதல்வர் விஜய் ரத்து செய்ததாக தகவல்கள் வெளியானது. உயிரிழப்புகள் நிகழ்ந்த சூழலில் கொண்டாட்டங்கள் பொருத்தமல்ல என்ற காரணத்தால் அவர் அந்த நிகழ்வைத் தவிர்த்ததாக கூறப்பட்டது.

ஆனால், அதே நாளில் திரிஷாவுடன் கேக் வெட்டியதாக வெளியாகிய புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் விமர்சனங்களை கிளப்பின. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்காமல் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதாக சிலர் குற்றம்சாட்டினர்.

இந்த நிலையில், தி.மு.க. ஐ.டி.விங் தனது எக்ஸ் (X) சமூக வலைதளப் பதிவில் இந்த விவகாரத்தை விமர்சித்துள்ளது.

நடிகை திரிஷா நடித்த திருப்பாச்சி திரைப்படத்தின் ஒரு காட்சியை பகிர்ந்த அந்த பதிவில், அமோனியா வாயுக் கசிவால் 10 பேர் உயிரிழந்ததும், பலர் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், “அந்த நாளில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று சந்திக்கவில்லை. எனவே அவருக்காக தெரிவிக்கப்படும் அனைத்து பிறந்தநாள் வாழ்த்துகளும் அர்த்தமற்றதாக தோன்றுகின்றன” என தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம் செய்துள்ளது.

இந்த விவகாரம் தற்போது சமூக வலைதளங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. அதே நேரத்தில், விபத்து தொடர்பான மீட்பு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## முதல்வரின் உரையா? ரீல்ஸ்க்கான உரையா?

### முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, ஜூன் 25 -

சட்ட மன்றத்தில் முதல்வர் பேசியது முதல்வரின் முதல் உரையா? தேர்தல் வாக்குறுதி நினைவிருக்கிறதா, என முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவு வருமாறு:-

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்த முதல்வரின் முதல் உரையா? உங்கள் ஆட்சியின் முடிவுரையா? கொளத்தூரில் 5 நிமிடம் பேசினேன் என்ற ஆணவப் பேச்சு தேவையா? சிறுகதை என்று கூறி உங்கள் அப்பா எங்கே என்ற நக்கல் பேச்சு தேவையா? கை செய்கை மூலம் நையாண்டி தேவையா? இது முதல்வரின் உரையா? ரீல்ஸ்க்கான உரையா?

சி.எம். சார் தேர்தல் வாக்குறுதி நினைவிருக்கிறதா? அங்கன்வாடி பணியாளர்கள் மாத ஊதியம் ரூ.18 ஆயிரம், அங்கன்வாடி உதவியாளர்கள் மாத ஊதியம் ரூ.10 ஆயிரம், காவலர்கள் அடிப்படை ஊதியம் ரூ.25 ஆயிரம் எங்கே? எஸ்சி,எஸ்டி மக்கள் தாட்கோவில் வாங்கிய முழு கடனும் தள்ளுபடி எங்கே? மீனவர்கள் தடைக்கால நிவாரணம் ரூபாய் 20 ஆயிரம், மீனவர்கள் மானிய விலையில் டீசல் 3 ஆயிரத்து 600 லிட்டர், அன்னபூரணி ஆண்டுக்கு 6 சிலிண்டர் எங்கே? மகளிர் கட்டணமில்லா பயணம் எங்கே, இளைஞர்கள் மாத உதவித் தொகை ரூ.4 ஆயிரம் எங்கே? சிஎம் சார், நினைவிருக்கிறதா? மக்கள் குரல் கேட்கிறதா?.

இவ்வாறு அவரது பதிவில் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் அரசு கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் ஏமாற்றம்!

### பெற்றோர்களுடன் உள்ளிருப்புப் போராட்டம்! கூடுதல் இடம் ஒதுக்காமல் அரசு அலட்சியம்!

விழுப்புரம், ஜூன் 25-

விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, மகளிர் கல்லூரிகளில் மாணவ, மாணவிகள் சேர்வதற்கு இடம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்ததால் தங்களது பெற்றோர்களுடன் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திராவிட மாடல் ஆட்சிகாலங்களில் கூடுதலாக சேர்க்கைக்கு 20 சதவீதம் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போதைய அரசின் அலட்சியத்தால் உயர்கல்வி செல்லும் மாணவ, மாணவிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தமிழகத்தில் பிளஸ் 2 தேர்வுமுடிவுகள் வெளியிடப்பட்டு உயர்கல்விக்கான மாணவ, மாணவிகள் சேர்க்கை நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் உள்ள சுமார் 192 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1.25 லட்சம் இடங்களுக்கு லட்சக்கணக்கான விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

தற்போது சேர்க்கை துவங்கிய நிலையில் கட்ஆப் மதிப்பெண், வெளிப்படை தன்மையின்றி மாணவ, மாணவிகள் சேர்க்கை நடைபெறுவதாகவும், இதனால் பல இடங்களில் குளறுபடி ஏற்பட்டு மாணவ, மாணவிகள் பெற்றோருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி விழுப்புரம் அரசு மகளிர் கல்லூரிக்கு சேர்க்கைக்கு வந்த 50க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்களுக்கு கல்லூரி நிர்வாகம் சீட்டு இல்லை என்று கூறியதால் ஆத்திரமடைந்து தங்களது பெற்றோர்களுடன் கல்லூரி முன்பு உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து பெற்றோர்கள் கூறுகையில், எங்களுக்கு சேர்க்கைக்கு வரச்சொல்லி கல்லூரியிலிருந்து எஸ்எம்எஸ் வந்தது. அதில் சான்றிதழ், கல்வி கட்டணம் உள்ளிட்டவைகளை கொண்டு வரச் சொன்ன நிலையில் நாங்கள் அதற்கேற்ப தயாராக வந்தோம். ஆனால் இங்கு வந்தவுடன் சீட்டு முடிந்துவிட்டதாக கூறி வெளியேற்றுகின்றனர்.

கடந்த ஆட்சிகாலங்களில் கட்ஆப் மதிப்பெண்களை வெளியிட்டு வெளிப்படைதன்மையுடன் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. ஆனால் தற்போது சிபாரிசு என்ற பெயரில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

எங்களைவிட குறைவான மதிப்பெண் பெற்றவர்களுக்குக்கூட சீட்டு கொடுக்கிறார்கள். ஆனால் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு சீட்டு வழங்கப்படவில்லை என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து தாலுகா காவல்நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மாணவிகள், பெற்றோரிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அதன் பின்னர் கல்லூரி முதல்வர், பேராசிரியர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி போராட்டத்தை கலைத்தனர்.

இதுகுறித்து பெற்றோர்கள் தரப்பில் கூறுகையில், விழுப்புரம் கீழ்பெரு ம்பாக்கம் அறிஞர் அண்ணா அரசு கலைமற்றும் அறிவியல்கல்லூரியில் பி.ஏ., பி.எஸ்சி உள்ளிட்ட 13 வகையான பாடப்பிரிவுகளுக்கு சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களுக்கு நடப்பாண்டு 20 ஆயிரம் விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

அதேபோல் அரசு மகளிர் கல்லூரியிலும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களுக்கு இதே அளவிலான விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவிக்கின்றது. கட்ஆப் மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடை பெறவில்லை. கடந்த ஆட்சியில் கூடுதலாக 20 சதவீதம் மாணவர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் தற்போதைய அரசில் மாணவர் சேர்க்கை குறித்தும், அதில் உள்ள முறைகேடுகள், மாணவ, மாணவிகளின் சிரமங்கள் குறித்து கண்டு கொள்ளவில்லை. கடந்தகால அரசின் திட்டங்களால் உயர் கல்வி படிப்போர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கல்வியின் பின்தங்கிய விழுப்புரம் மாவட்டத்தில் அரசு கல்லூரியில் மாணவர் சேர்க்கை முறைகேடுகள் குறித்து அரசு கண்டு கொள்ளாமல் உள்ளது பெற்றோர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மாவட்ட ஆட்சியர் நேரடியாக ஆய்வு செய்து அரசு கல்லூரிகளில் நேர்மையான முறையில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

## விஜயின் பேச்சு பொய் என்பதை அம்பலப்படுத்திய த.வெ.க. வேட்பாளர்!

சேலம், ஜூன் 25 -

ஓட்டுக்கு பணம் கொடுக்கவில்லை என பேரவையில் முதலமைச்சர் விஜய் பேசிய நிலையில், ஓட்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுத்ததாக த.வெ.க. வேட்பாளர் ஒப்புக் கொண்ட காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதன் மூலம் விஜயின் கூற்று பொய் என்பது அம்பலமாகியுள்ளது.

சேலம் மாவட்டம் ஓமலூர் தொகுதியில் போட்டியிட்ட த.வெ.க. வேட்பாளர் அதியமான் தோல்வியடைந்தார். இதனை அடுத்து, ஓமலூரில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அதியமான், ஓமலூர் தொகுதிக்கு அருகில் உள்ள சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட த.வெ.க. வேட்பாளர் லட்சுமணன், வாக்காளர்கள் அனைவருக்கும் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்ததாகக் கூறினார். இந்தக் காட்சிகள் தேர்தல் முடிவுகள் வெளியான சமயத்தில் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், ஓட்டுக்கு பணம் கொடுக்கவில்லை என பேரவையில் முதலமைச்சர் விஜய் பேசிய நிலையில், ஓட்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டதாக, த.வெ.க. வேட்பாளரே பேசியுள்ள இந்தக் காட்சிகள் மீண்டும் வைரலாகி வருகிறது.